**MCOP NO: 3679/2022** **DATE: 09.07.2026**

எம.சா : 1

பெயர் : செல்வி. காருண்ய லட்சுமி

த/பெ : திரு. உதய குமார்

வயது : 29

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 09.07.2026ல் பதிவு செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணம் 1 தாக்கல் செய்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கோப்புகளின் அடிப்படையில் தான் சாட்சி சொல்கிறேன். டிஎன் 02 பிஎஸ் 3282 என்ற இருசக்கர வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் தான் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் அவருடைய வாகனத்திற்கு நாங்கள் பாலிசி வழங்கப்படவில்லை என்பதால் நாங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என்னுடைய எதிர் உரையில் இத பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனம் பாலிசி கொடுக்கப்பட்டு அது நிலுவையில் உள்ளதால் நாங்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தால் காப்பீடு வழங்கப்படவில்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.